

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு சோழவரம் பேருந்து நிறுத்தம் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு பிரியாணி வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் இரா.விஜயன். ப.சீனிவாசன், ப.சேகர். கே.வீரம்மாள், நா.பரசுராமன், டிசைன்ராஜ், ஜாகீர் உசேன். பி.வி.எத்திராஜ். ஜெகன், எஸ்.பி.குமார், கே.வி.தியாகராஜன், நசீர்பாட்ஷா, திருமலை, எம்.சி.முருகன், விமல்குமார், ஆர்.சி.சிவசங்கர். க.பிரபு, கார்ட்சன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சோழவரம் தெற்கு ஒன்றிய கவுன்சிலர் சுகவேணி முருகன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# காஞ்சிபுரத்தில் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள்

## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. வழங்கினார்

காஞ்சிபுரம், ஜூலை 3 -

கடந்த 09.06.2025 அன்று காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களான வ. வெண்ணிலா, பி. சாந்தி, எம். எல்டாராணி, என். சுதா, ஜி. லோகநாதன், எம். டில்லிபாபு, எம். அருண் ஆகியோர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.வை சந்தித்து, வரும் (04.07.2025 - 06.07.2025) வரை சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற உள்ள தேசிய அளவிலான சக்கர நாற்காலி வாள்வீச்சு போட்டி - 2025 (National Wheelchair Fencing Championship 2025) போட்டியில் பங்கேற்க உள்ளதை தெரிவித்து, அவர்கள் போட்டியில் பங்கேற்க ஏதுவாக பென்சிங் உடை (Fencing Dress) மற்றும் உபகரணங்கள் (Kit) தேவை என கோரிக்கை வைத்தனர். அவர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அளித்ததன் அடிப்படையில், அவர்கள் போட்டியில் பங்கேற்க தேவையான பென்சிங் உடை (Fencing Dress) மற்றும் உபகரணங்கள் (Kit) சி.வி.எம்.பி.எழிலரசன் வழங்கினார்.. இந்நிலையில், வரும் 04.07.2025 அன்று போட்டியில் பங்கேற்பதற்கு முன்பாக, காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசனை சந்தித்து, நன்றி தெரிவித்து போட்டியில் வெற்றி பெறுவதற்கு வாழ்த்து பெற்றனர்.




காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களான வ. வெண்ணிலா, பி. சாந்தி, எம். எல்டாராணி, என். சுதா, ஜி. லோகநாதன், எம். டில்லிபாபு, எம். அருண் ஆகியோர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.வை சந்தித்து, வரும் (04.07.2025 – 06.07.2025) வரை சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற உள்ள தேசிய அளவிலான சக்கர நாற்காலி வாள்வீச்சு போட்டியில் பங்கேற்க உள்ளதை தெரிவித்து, அவர்கள் போட்டியில் பங்கேற்க ஏதுவாக பென்சிங் உடை மற்றும் உபகரணங்கள் (Kit) தேவை என கோரியதை ஏற்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அளித்ததன் அடிப்படையில், அவர்கள் போட்டியில் பங்கேற்க தேவையான பென்சிங் உடை (Fencing Dress) மற்றும் உபகரணங்கள் (Kit) சி.வி.எம்.பி.எழிலரசன் வழங்கினார்..

### “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை மூலம்

# பா.ஜ.க. பாசிச சக்தியை எதிர்க்க மக்களை ஓரணியில் திரட்டுவோம்

## செங்கல்பட்டில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேச்சு!

**செங்கல்பட்டு, ஜூலை -3**

**“ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை மூலம் பா.ஜ.க. பாசிச சக்தியை எதிர்க்க மக்கள் ஓரணியில் திரட்டுவோம் என்று செங்கல்பட்டில் அமைச்சர் தா. மோ.அன்பரசன் குறிப்பி ட்டுள் ளார்.**

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் செங்கல்பட்டில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

பேட்டி விவரம் வருமாறு:

முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் இன்று ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த “ஓரணியில் தமிழ்நாடு” என்ற முழக்கத்தை முன்வைத்து கழக உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்துள்ளார்.

இந்த உறுப்பினர் சேர்க்கையானது இன்று தொடங்கி அடுத்த 45 நாட்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள பகுதி ஒன்றிய நகர பேரூர் என மூலை முடுக்கெல்லாம் நடைபெற உள்ளது.

“ஓரணியில் தமிழ்நாடு” நோக்கம், இது உறுப்பினர் சேர்க்கை மட்டும் அல்ல, தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காப்பதற்காக தமிழ்நாட்டை ஒன்று திரட்டுவது தான் இதன் நோக்கம் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்.

இந்த பரப்புரையில் சாதி மத அரசியல் பாகுபாடுகள் இன்றி தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் அணுகி தமிழ்நாட்டிற்கு

ஒன்றிய அரசு இழைக்கும் அநீதிக்கு எதிராக நாம் ஓரணியில் திரள வேண்டும் என மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பத்தினரையும் “ஓரணியில் தமிழ்நாடு” என்று ஒன்றிணைப்பது தான் எங்களின் முக்கிய இலக்காகும்.

பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு இழைக்கும் அநீதிகள். சமீப காலமாக தமிழ்நாடு மொழி - இனம் அரசியல் ரீதியிலான அநீதிகளை சந்தித்து வருகிறது.

இந்தி திணிப்பு கல்வி நிதியை நிறுத்தி வைப்பு 100 நாள் வேலைக்கு நிதி தராதது மாநில உரிமைகளை பறிப்பது கீழடி தொன்மையை மறுப்பது நீட் தேர்வு என ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு அநீதிகளை தமிழ்நாட்டிற்கு இழைக்கிறது.

ஜி.எஸ்.டி.யில் தமிழ்நாட்டிற்கு பாரபட்சம் இன்று, ஜிஎஸ்டி தினம் என்பதால் ஒன்றிய அரசு தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நிதி சுதந்திரத்தை எவ்வாறு வஞ்சிக்கிறது என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன் .

தமிழ்நாடு ஒன்றிய அரசுக்கு ஜி.எஸ்.டி.வரியாக 1 ரூபாய் அளித்தால் அவர்கள் நமக்கு கொடுப்பது வெறும் 29 பைசா மட்டும் தான் ஆனால் உத்திரபிரதேசத்திற்கு 3.23 ரூபாய்க்கு மேல் கொடுக்கப்படுகிறது.

பா.ஜ.க. பாசிச சக்தியை எதிர்க்க மக்களை ஓரணியில் திரட்டுவோம் பா.ஜ.க. என்ற பாசிச சக்தி தமிழ்நாட்டை எப்போதும் ஒரு வன்மத்தோடு தான் பார்க்கிறது. மதவாத பா.ஜ.க.வின் கோரப் பிடியில் தமிழ்நாடு சிக்கினால் ஏற்படும் ஆபத்து மிகவும் கொடூரமானதாக இருக்கும்.

இதை உணராத அ.தி.மு.க. பா.ஜ.க.வுடன் கூட்டணி என்ற பெயரில் அடித்தளம் அமைத்து கொடுத்து வருகிறது. இந்த



கூட்டணியின் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிலும் பாசிசம் என்ற கொடூர விஷத்தை பரப்ப பார்க்கிறது. இதை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு நின்று எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பா.ஜ.க. சதி எடுப்படாது துரோகிகளையும் போலிகளையும் வைத்துக் கொண்டு தமிழ்நா ட்டை வீழ்த்த பா.ஜ.க. நடத்தும் சதி ஒருபோதும் எடுப்படாது என்பதை ஓரணியில் திரண்டு நின்று தமிழ்நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்டுவதற்கு நம்முடைய தலைவர் அவர்கள் ஏற்படுத்தி தந்துள்ள களம் தான் ஓரணியில் தமிழ்நாடு என்கிற மகத்தான மக்கள் இயக்கம்.

பா.ஜ.க.வின் அடக்குமுறைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்க்கொள்ள மீண்டும் ஒருமுறை மண் மொழி மானம் காப்பதற்கு தமிழ்நாடு தயாராகி விட்டது.

ஒன்றுகூடி போராட வேண்டிய நேரம் வந்துவிட்டது தமிழ்நாட்டின் கண்ணியத்தையும் சுயமரி யாதையையும் உரிமைக ளையும் காக்க நாம் ஒன்று கூடி போராட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இந்த போராட்டம், நமக்கானது மட்டுமல்ல நம்முடைய பிள்ளைக ளுக்கானது நம்முடைய எதிர்கால தலைமுறைக்கானது. இந்த முக்கியத்துவதை உணர்ந்து தான் ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தை முன்னெடுத்து தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் கொண்டு செல்ல உள்ளோம்.

ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் மேற்கொண்டுள்ள இந்த முன்னெடுப்பிற்கு வலுசேர்க்கும் விதமாக நாளை 2ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் “ஓரணியில் தமிழ்நாடு” விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளது.

அந்த வகையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டோன்மெண்ட் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் கழக சிறப்பு பேச்சாளர் சைதை சாதிக் இளம் பேச்சாளர் பேரரசு ஆகியோர் கலந்துக் கொண்டு உரையாற்ற உள்ளனர்.

“ஓரணியில் தமிழ்நாடு” காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தமிழ்நாடு முழுவதும் ஜூலை 3ஆம் தேதி முதல் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று கழகத்தினர் பரப்புரையை மேற்கொள்ள உள்ளனர்.

அந்த வகையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” கழக உறுப்பினர் சேர்க்கும் பணி இன்று ( 3ஆம் தேதி முதல் மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கிய 2404 பூத்களிலும் நடைபெறுகிறது.

“ஓரணியில் தமிழ்நாடு” “ஓரணியில் தமிழ்நாடு” பூத் குழு ஒவ்வொரு பூத்களிலும் உள்ள வாக்குச்சாவடி நிலை முகவர் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜன்ட் (BDA) வாக்குச்சாவடி தேர்தல் பணி உறுப்பினர் (BLC) இளைஞர் அணி மகளிர் அணி என 5 நபர்கள் கொண்ட குழு இப்பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

இக்குழுவினர் வீடு வீடாகச் சென்று “ஓரணியில் தமிழ்நாடு” முழக்கத்தின் முக்கிய செய்தி என்ன? இலக்கு என்ன ? என்பதை ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் அமர்ந்து பேசி எடுத்துரைப்பார்கள்.

படிவம் APP மூலம் உறுப்பினர் சேர்க்கும் பணி தி.மு.க.வில் இணைய விருப்பம் உள்ளவர்கள் நேரடியாக படிவம் மூலம் பூர்த்தி செய்து இணையலாம், மேலும் பிரதியேகமாக தயாரிக்கப்பட்டுள்ள “மக்களுடன் ஸ்டாலின்” ஆப் மூலம் விவரங்களைபூர்த்தி செய்து உறுப்பினராக இணைய வேண்டும்.

வீடு வீடாகச் சென்று தி.மு.க.வினர் மேற்கொள்ளும் இந்த பரப்புரை ஆகஸ்ட் மாதம் மத்தியில் நிறைவடையும்.

இவ்வாறு அவர் பேட்டியில் கூறியுள்ளார்.




சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வேண்டுகோளுக்கிணங்க, தியாகராயர் நகர் மேற்குப் பகுதி, 132 வது வட்டத்தில் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கூட்டம் வட்டக் கழக செயலாளர் ந.மோ.முரளி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் வழங்கினர். கோடம்பாக்கம் மு.சத்யா, சா.தேவராசு மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### மக்களுக்குப் பாதிப்புவரும் பொழுது

# மக்களைக் காப்பாற்ற மக்கள் பக்கம் தான் நிற்போம்!

## தென்காசியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேட்டி!

தென்காசி.ஜூலை.3

தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் தளபதி அவர்கள் தமிழக மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒரு குடையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார். டெல்லி பாசிச பா.ஜ.க அரசு தமிழ்மொழியை, தமிழ் உணர்வையும்,தமிழர்களின் மானத்தையும் அழிக்க வேண்டும் என்று எண்ணுகிற முயற்சியை தடுத்து நிறுத்த “ஓரணியில் தமிழ்நாடு”என்ற கருத்தை சொல்லி தமிழ் மொழியையும் மானத்தையும் காப்பாற்றவும்,அரசுக்கு தேவையான நிதியை பெறுவதற்காகவும் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை கண்டிப்பதற்காகவும் முன்னெடுப்பு செய்திருக்கிறார்.நாம் அத்தனை பேரும் ஒன்றாக சேர வேண்டும்.

தமிழகத்தில் 68,000 ம் வாக்குச்சாவடிகள் உள்ளது. தென்காசியில் 1,564 வாக்குச்சாவடிகள் உள்ளது.கழக பொறுப்பாளர்கள்,நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் நிர்



வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) உடன் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து அரசின் திட்டத்தால் பயனடைந்து உள்ளார்களா? வேறு தேவைகள் உள்ளதா என்பது குறித்து எல்லாம் கேட்டு அறிந்து அதனை சரி செய்து கொடுப்பதற்காக இந்த திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் துவங்கியிருக்கிறார். 3 ம் தேதி தொடங்கி 45 நாட்கள் இது நடைபெறுகிறது. கட்சியைப் பார்க்காமல் இந்தப் பணியை செய்ய இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்தும்,அரசின் சாதனைகளை சொல்லியும்,

மகளிர் உதவித்தொகை முதியோர் உதவித்தொகை கிராமங்களில் உள்ள பிரச்சினைகள் உள்ளிட்டவற்றை தலைமைக் கழகத்திற்கு எடுத்துச் சொல்லி அவற்றிற்கு தேவையான நிவாரணங்களை பெற்றுத் தர இருக்கிறோம்.உறுப்பினர்களை சேர்ப்பதற்காக மட்டுமல்ல, எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள், வாக்களித்தவர்கள்,வாக்களிக்காதவர்களை கூட எங்களை ஆதரிக்கும் வகையில் எங்களது அணுகுமுறை இருக்கும்.ஊர் ஊராக ஒவ்வொரு பூத்துகளுக்கும் செல்ல வேண்டும்.

நான்கு ஆண்டுகள் முதலமைச்சர் அவர்களின் சாதனைகளால் ஆட்சி நடந்து வருகிறது.தென்காசி புதிதாக பிரித்த மாவட்டம். தென்காசி ஆட்சியர் அலுவலகம் சுற்றுச்சூழல் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டு விட்டது என்று சொல்லி, நல்ல காரியம் நடக்கும் பொழுது ஒரு சில சக்திகள் தடுப்பதில் குறியாக இருக்கின்றனர். தென்காசி மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் வருகையின் போது நல்ல அறிவிப்புகளும், பெரிய திட்டங்களும் வரும். விருதுநகரில் நடைபெற்ற அரசு நிகழ்வில் முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 450 கோடியை ஒதுக்கி உள்ளார்கள்.இரண்டு மூன்று வருடங்களாக அரசிடம் போதிய பணம் இல்லாத காரணத்தால் அரசை நடத்துவதே சிரமமாக இருந்தது.பணம் இல்லை என்பது உலகம் அறிந்த விஷயம். கடந்த அரசு பணமே இல்லாமல் விட்டு சென்று விட்டனர்.

நான்கு வருடங்களாக அரசை நடத்தியதே முதல்வர் அவர்களின் தனிப்பட்ட சாமர்த்தியம் தான். தென்காசி புதிய மாவட்டம்.இனிமேல் தான் வளர்ச்சி பெறும்.இந்த மாவட்டம் முன்னேற வேண்டும்.மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.கனிமவள பிரச்சினையில் அரசு பல விதிமுறைகளை அறிவித்துள்ளது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சக்கரங்களுக்கு மேல் உள்ள வண்டிகளை இயக்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்துள்ளது. ஆன்லைன் மூலம் பாஸ் வழங்கப்படுகிறது. இவற்றையெல்லாம் மீறி ஒரு சிலர் தவறு செய்கின்றனர்.அவை எல்லாம் சரி செய்யப்படும்.தென்காசி மாவட்டத்தில் பெரிய அளவில் தொழிற்சாலை இல்லை.இந்த மாவட்டம் விவசாயத்தை நம்பியே உள்ளது.அதில் தான் வாழ்வாதாரம் செய்து நடத்தி வருகின்றனர். இதனாலே சாலை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிலத்தை கையகப்படுத்தும் போது விவசாய நிலம் என்று எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். தென்காசி மாவட்டத்தின் தேவைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் இடம் கேட்டிருக்கிறோம்.முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.சாரல் திருவிழா நிதி வசூல் குறித்து விபரம் கேட்டு ஆலோசனை வழங்கப்படும். விசாரணை கைதி மரணம் குறித்து போலீசார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.போலீஸூக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆறு பேர் தவறு செய்திருந்தால் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பது இல்லை, மக்களுக்கு பாதிப்பு வரும் பொழுது மக்கள் பக்கம் தான் நிற்போம்.

தவறு செய்தவர்களை காப்பாற்றி அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படும் வகையில் செயல்பட மாட்டோம்.அரசுக்கும் முதல்வருக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு கிடையாது.தவறு யார் செய்திருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

அப்போது தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.தென்காசி நகர செயலாளர் சாதிர் ஆகியோர் உடன் இருந்தனர்.

### கோலியனூர் ஒன்றியத்தில்

# கலைஞர் பிறந்த நாள் கூட்டம்!

## வே. விக்ரமன்- அப்துல் வகாப் அதாய் சிறப்புரை

கோலியனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் கோலியனூர் கூட்ரோடு அருகில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா.ராஜசேகர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் பா.தெய்வசிகாமணி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன் வரவேற்புரை ஆற்ற தலைமைக் கழக பேச்சாளர்கள் வே. விக்ரமன்,அப்துல் வகாப் அதாய் மற்றும் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் துரை.கி.சரவணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், தே. முருகவேல், ஏ.சச்சிதா னந்தம் , ஏசி கே பிரேம், பா கலைவாணன், ப.அன்பரசு, உதயகுமார், இரா.கண்ணப்பன் பா.சிவசங்கர், ம.குணசேகர், எம்.ராமச்சந்திரன் , எஸ்.ஸ்ரீதர், ஆர்.ஜெயந்தி கிருபாநிதி, ஆர்.கே.மணிவேல், சிவகாமி ராஜசேகர், சக்கரவர்த்தி, ஜே.முத்து க்குமார், மு.பிரபாகரன், எஸ்.செந்தமிழ்செல்வன், எடிட்ராஜ், நாகவல்லி மற்றும் பலர் கலந்து கொண்டனர். இ.மணி நன்றி கூறினார்.



விருகம்பாக்கம், 128வது வார்டுக்குட்பட்ட தாராசந்த் நகரில் புதிதாக அமைக்கப்படும் தார் சாலையின் தரத்தை மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் ஆய்வு செய்தார்.